இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று முன்தினம் (16.11.2023) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயிலில் புதுப்பிக்கப்பட்ட தங்கத்தேரின் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் சிவக்குமார், அறங்காவலர் குழுத் தலைவர் சு.செந்தில் குமார், உதவி ஆணையர் திரு.இ.ஜீவானந்தம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (16.11.2023) கூட்டுறவுத் துறையின் சார்பில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட, சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை3) மற்றும் தட்டச்சு பணிக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.கப்பையன், ஆகியோர் உள்ளனர்.

திருப்பூர் தாராபுரம் சாலை விபத்தில்

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.18-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அரசின் செய்திக் குறிப்பு வருமாறு :-

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், மணக்கடவு கிராமம், ஆலங்காட்டுப்பிரிவு என்ற இடத்தில் 16.11.2023 அன்று மாலை டேங்கர் லாரியும், நான்கு சக்கர வாகனமும் நேருக்குநேர் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் நான்கு சக்கர வாகனத்தில் பயணம் செய்த தாராபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (வயது 65), அவரது மனைவி திருமதி. செல்வி (வயது 50), கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம், வஞ்சியம்மா நகரைச் சேர்ந்த தமிழ்மணி (வயது 50), அவரது மனைவி திருமதி.சித்ரா (வயது 45) ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

மேலும் திண்டுக்கல்லைச் சேர்ந்த திருமதி.கலாராணி (வயது 55) என்பவர் தாராபுரம் அரசு மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில்

கடன்பெற சிறப்பு முகாம்கள்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

புத்தக நகல் மற்றும் கல்வி கடனுக்கு விண்ணப்பிக் கும் போது பள்ளி மாற்று சான்றிதழ், உண்மை சான்றிதழ் (Bona fide) மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை, நவ 18-

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TAMCO) மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்(TABCEDCO) மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களான தனிநபர் கடன், சுயஉதவி குழுக்களுக்கான சிறு தொழில் கடன், கைவினை கலைஞர்களுக்கு கடன் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி, திட்டத்தினை சிறுபான்மையினர் மக்கள் அறிந்து கடன் பெற்று வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் வகையில் கடன் விண்ணப்பங்கள் பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 22.11.2023 அன்றும், திருவட்டார் வட்டாட்சியர் அலுவலகத்தில் 23.11.2023 அன்றும், கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 24.11.2023 அன்றும், விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் 28.11.2023 அன்றும்,

தோவாளை வட்டாட்சியர் அலுவலகத்தில் 29.11.2023 அன்றும், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 30.11.2023 அன்றும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடை பெறும்.

மேற்படி சிறப்பு முகாம்களில் இத்திட்டத்தின் கீழ் கடன்பெற விண்ணப்பங்கள் அளிக்கலாம்.

மேற்படி, தனிநபர் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது சாதிச்சான்று, வருமானச்சான்று, இருப்பிடச் நகல், தொழில் திட்ட சான்று, ஆதார் அட்டை அறிக்கை, கூட்டுறவு வங்கி

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. முகமது அலி
நவம்பர் 18 (2013)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு வீட்டுவசதி அடமான வங்கி இயக்குநர், மாவட்ட தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

தமிழ்நாடு முழுவதும் 100 வேலைவாய்ப்பு முகாம்கள்!

அரசு திட்டம்!

கடலூர், நவ. 18-

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ('கலைஞர் 100") விழாவை முன்னிட்டு 2023-2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 100 சிறப்பு மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப் பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 25.11.2023 (சனிக்கிழமை) அன்று காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை கடலூர், மஞ்சக்குப்பம் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது. இம்முகாமில் உற்பத்தி, தகவல் தொழில்நுட்பம், ஜவுளி, வங்கிசேவைகள், காப்பீடு, மருத்துவம், கட்டுமானம் உள்ளிட்ட முக்கிய துறைகளைச் சார்ந்த பல முன்னனி வேலையளிக்கும் நிறுவனங்கள் தங்களின் காலிப்பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

நடைபெறவிருக்கும் இம்முகாமில் 8 ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டப்படிப்பு, பொறியியல், செவிலியர், ஆசிரியர், தொழிற்கல்வி போன்ற அனைத்து விதமான கல்வித்தகுதியினை உடையவர்களும் கலந்துக்கொண்டு பயன்பெறலாம். இச்சிறப்பு மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள வேலையளிக்கும் நிறுவனங்களும், வேலைநாடுநர்களும் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது. முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி (04142-290039), 9499055908, 9499055907 வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

எனவே கடலூர் மாவட்டத்தில் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்கள் 25.11.2023 (சனிக்கிழமை) நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், தெரிவித்துள்ளார்கள்.

இந்து சமய அறநிலையத் துறைசார்பில்

தாயமங்கலத்தில் 3 ஜோடிகளுக்கு திருமணம்!

தமிழரசி எம்.எல்.ஏ. நடத்தி வைத்தார்!

சிவகங்கை, நவ. 18 -

தமிழக இந்து சமய அறநிலையத் துறை சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருமணங்களை நடத்தி வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். அதன்படி சிவகங்கை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தாயமங்கலத்தில் உள்ள முத்துமாரியம்மன் கோயிலில் மூன்று ஜோடிகளுக்கு இந்துசமய அறநிலையத் துறை சார்பாக நடைபெற்ற திருமணத்தை மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மணமக்களுக்கு கட்டில், டேபிள், குத்துவிளக்கு, அடுப்பு ,மெத்தை உட்பட சீர் பொருட்கள் அனைத்தும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் பழனிக்குமார், உதவிஆணையர் செல்வராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., சுப.மதியரசன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் ஏ.ஆர். ஜெயமூர்த்தி, நிர்வாகிகள் சத்தியேந்திரன், விவசாய அணி பா.காளிமுத்து, கூட்டுறவு சங்க தலைவர் சுப. தமிழரசன்,தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் சுப.அன்பரசன், கண்ணன், மீனவரணி பா.சேகர் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். தாயமங்கலம் முத்துமாரி அம்மன் கோவில் ல்டிரஸ்டி வெங்கடேசன் நன்றி கூறினார்.